## கலகங்களுக்கும் எழுச்சிக்கும் முன்னோடி தமிழ் மண்:

# தமிழ் வேந்தர்களின் பாரம்பரிய தொடர்ச்சியே முதல்வர்...!

### மதுரை புத்தகத் திருவிழாவில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேருரை!

**மதுரை, செப். 16 -**

**செப்டம்பர் 13 ஆம் தேதி சனிக்கிழமை, மதுரை மாவட்டம், தல்லாகுளத்தில் உள்ள மாநகராட்சி மாநாட்டு மையத்தில் நடைபெற்று வரும் புத்தக திருவிழாவில் கலந்துகொண்டு, புத்தக அரங்குகளை பார்வையிட்டு, அதனைத் தொடர்ந்து "தெற்கின் எழுச்சி" என்ற தலைப்பில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் உரையாற்றினார்.**

அவர் பேசும்போது,

"நம்முடைய மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்ந்து என்னோடு பலமுறை அவர் சண்டையிட்டிருக்கிறார். ஏதாவது ஒரு நிகழ்ச்சினா எல்லாம் தூத்துக்குடியில் தான் பண்றீங்கனு சொல்லுவார். தூத்துக்குடி விமான நிலையம் விரிவாக்கம் செய்யப்பட்டபோதும், மதுரையிலும் விமான நிலையம் இருக்கிறது என்று என்னிடம் வாதிட்டார்.

இன்று இந்த தமுக்கம் மைதானத்திலே புத்தகத் திருவிழாவிலே இந்த அரங்கத்துக்குள் வந்த போது அவரிடம் நான் தெளிவாக சொன்னேன்... 'இனிமே தூத்துக்குடி அப்படினு ஏதாவது சொன்னீங்கன்னா நான் பெரிய சண்டைக்கு வந்திடுவேன். ஏன்னா ஒரு புத்தகத் திருவிழா நடத்துவதற்கு இவ்வளவு பெரிய அரங்கத்தை வைத்திருக்கக் கூடிய ஊர் மதுரை.

அது மட்டும் இல்லை நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள், வாழ்நாள் முழுதும் புத்தகங்களை நேசித்த தலைவர் கலைஞரின் பெயரால் பிரம்மாண்ட நூலகம் அமைத்திருப்பது மதுரையில்தான். அதனால் இனிமேல் அவர் தூத்துக்குடியோடுதான் எதற்கும் போட்டிக்கு வரக் கூடாது என்பதையும் இந்த நிகழ்ச்சி மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**போரிடும் நாடாளுமன்ற உறுப்பினர்!**

தொடர்ந்து தமிழ்நாட்டின் பெருமைகளுக்காக, நம்முடைய இலக்கியம், நம்முடைய பாரம்பரியம் நம்முடைய வரலாறு இவற்றை நம்மிடம் இருந்து தொடர்ந்து பிடுங்க நடக்கக் கூடிய முயற்சிகளை எதிர்த்து, நம்மோடு நின்று தொடர்ந்து போரிடக் கூடிய ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக குரல் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய போரிட்டுக் கொண்டிருக்கக்கூடிய ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக அவர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். அவருக்கு என்னுடைய வாழ்த்துக்களை இந்த மேடையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இன்று எனக்கு தரப்பட்டிருக்கக் கூடிய தலைப்பு 'தெற்கின் எழுச்சி'.

தெற்கின் எழுச்சி பற்றி பேசுவதற்கு என்ன இருக்கிறது... கண்கூடாக நாம் தினம் பார்த்துக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய ஒரு நிதர்சனத்தை, அதை பதிவு செய்ய வேண்டிய நேரத்திலே இந்த மேடையிலே நான் நின்று கொண்டிருக்கிறேன்.

ஏனென்றால் நம்முடைய பெருமைகளை நாம் பதிவு செய்வதில்லை. தமிழ்நாட்டிலே எத்தனையோ சாதனைகளை செய்வோம், ஆனால் அதையெல்லாம் ஏதோ வாழ்க்கையில் தினம் நடக்கக்கூடிய அனுதினமும் நாம் கடந்து செல்லக்கூடிய ஒன்றாக மாற்றி அதை கடந்து சென்று விடுகிறோம். ஆனால் நிறைய பேர் இருக்காங்க. எதையுமே செஞ்சி இருக்க மாட்டாங்க.

வேற யாராவது செஞ்சதுக்கு கூட தான் கல்வெட்டு எழுப்பி பதிவு போட்டுக் கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலையிலே நாம் நம்மை பற்றி பேச வேண்டும் என்ற அந்த காரணத்திற்காகத்தான் இங்கே இருக்கக்கூடிய சு. வெங்கடேசன் அவர்களும் நம்முடைய மாவட்ட ஆட்சியர் அவர்களும் தெற்கின் எழுச்சி பற்றி பேச வேண்டும் என்று என்னை அறிவுறுத்தி இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

**சமஸ்கிருதத்திற்கு தொன்மை இருக்கலாம் ஆனால் தொடர்ச்சி இல்லை!**

தெற்கைப் பற்றி, தென் மாநிலங்களைப் பற்றி பேச வேண்டும் என்றாலே... அது மற்ற இடங்களில் இந்த நாட்டின் மற்ற பகுதிகளில் இருந்து சற்று வித்தியாசப்பட்டது. தமிழைப் பற்றி பேசும்பொழுது தொன்மையும் தொடர்ச்சியும் இருக்கக் கூடிய ஒரு மொழி என்று பெருமையோடு பேசுவோம். நிறைய மொழிகள் கிளாசிக்கல் லாங்குவேஜ் என்ற அந்த பெருமையை பெற்றிருக்கலாம் ஆனால் இன்றைக்கு பேசக்கூடிய ஆட்கள் கிடையாது.

இந்தியாவில் சமஸ்கிருதத்திற்கு கோடி கோடியாக நூற்றுக்கணக்கான கோடிகளாக ஒன்றிய அரசாங்கம் செலவு செய்து கொண்டிருக்கிறது. ஆனால் அதற்கு தொன்மை இருக்கலாமே தவிர தொடர்ச்சி கிடையாது. இங்கே இருப்பவர்கள் யாராவது எழுந்து சமஸ்கிருதம் பேசுங்க என்று சொன்னால், எத்தனை பேர் பேசுவார்கள்?

ஆனால் தமிழுக்கு என்று தொன்மையும் இருக்கிறது தொடர்ச்சியும் இருக்கிறது. இன்றைக்கு வரைக்கும் தமிழர்கள் எங்கெங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்களோ, மலேசியாவா இருக்கட்டும், சிங்கப்பூராக இருக்கட்டும்... சில இடங்களில் பேசக் கூடிய வாய்ப்பு இல்லையென்றால் கூட தமிழில் பாடுகிறார்கள், பழமொழிகளை சொல்லுகிறார்கள். கற்றுக் கொள்ள ஆர்வம் இருக்கிறது.

சங்கம் வளர்த்த இந்த மதுரையிலே அன்று பேசிய அந்த மொழியின் தொடர்ச்சி இன்று வரை இந்த மண்ணிலே இருக்கிறது. இதுதான் தமிழுக்கும் மற்ற மொழிகளுக்கும் இருக்கும் வித்தியாசம்.

செம்மொழி என்று சொல்லி ஒரு காலத்தில் மட்டும் பேசிய மொழியல்ல தமிழ்...

நான் பேசக்கூடிய என்னுடைய எதிர்கால தலைமுறை பேசக்கூடிய அந்த தொடர்ச்சி இருக்கக்கூடிய மொழி என்ற பெருமை பெற்ற மொழி தமிழ் மொழி. அந்த பெருமை இருப்பதால் தான் நமக்கும் பல பேருக்கும் வித்தியாசம் இருக்கு.

தூத்துக்குடியில் பேசிய வெங்கடேசன் அவர்கள் பேசும்பொழுது ஒன்றை சொன்னார்... இன்னைக்கு மகாராஷ்டிராவில் பேசப்படும் ஒரு மொழி... அந்த மொழிக்கு பெயர் மோடி. நான் வேற எந்த அரசியலும் பேசல. அந்த எழுத்து வடிவதற்கு பெயர் மோடி. அந்த எழுத்து வடிவம் இன்று அங்கே இல்லாமல் போய்விட்டது. ஏனென்றால் அவர்கள் இந்தி திணிக்கப்பட்ட போது அதை ஏற்றுக் கொண்டார்கள். தேவநாகரி திணிக்கப்பட்டபோது அதை ஏற்றுக் கொண்டார்கள்.

**இன்றுவரை எழுத்து மொழி உள்ள தமிழ்!**

ஆனால் தமிழ்நாட்டில்தான் மொழிப்போர் நடந்தது. அதனால்தான் இன்று வரை நாம் எழுத்து வடிவம் பாதுகாப்பாக இருக்கிறது.

எழுத்து வடிவம் சில மாற்றங்களை அடைந்திருக்கிறது. அது காலத்தின் போக்கிலே மாறிய எழுத்து வடிவம்தானே தவிர, யாரும் நம்ம மேல வந்து கொண்டு வந்து எந்த எழுத்து வடிவத்தையும் திணித்து விடவில்லை.

தமிழுக்கு என்று தனித்துவமான ஒரு எழுத்து வடிவம் இருக்கிறது. அதுதான் தமிழ்நாட்டுக்கும் தென் மாநிலங்களுக்கும் மற்ற இடங்களுக்கும் இருக்கக்கூடிய வித்தியாசம்.

அதை தாண்டி தென் மாநிலங்களில் ஒரு பாதுகாப்பு இருந்தது. வேறு ஒருவர் வந்து இங்கே ஆட்சி செய்து கொண்டிருக்கக் கூடிய காலகட்டத்திலும் நம்முடைய மொழியை நம்முடைய பண்பாட்டை நம்முடைய கலைகளை இலக்கியத்தை நாம் விட்டுக் கொடுத்து விடவில்லை.

இந்த பகுதியில் இருந்த பாதுகாப்பு... நம்முடைய மொழியை இலக்கியங்களை பண்பாட்டை கலை வடிவங்களை பாதுகாத்திருக்கிறது. இதற்காக நாம் கொடுத்து இருக்கக்கூடிய விலை பெரிது.

அதையும் மீறி தமிழர்கள்... இங்கே வெளியில் இருந்து யாரும் வரவில்லை... அதனால நமக்கு இதுதான் உலகம், தமிழ்நாடு மட்டும் தான் உலகம். சேர சோழ பாண்டியர்களோடு எங்களுடைய உலகம் முடிந்து விட்டது என்று வாழ்ந்தோமா என்றால் இல்லை.

**வெற்றிக்கொடி நாட்டிய தமிழர்கள்!**

உலகம் முழுவதும் நம்முடைய கப்பல்களை செலுத்தி வாணிகம் செய்தவர்கள் தமிழர்கள். கடாரம் கொண்டவர்கள் தமிழர்கள். எத்தனையோ நாடுகளுக்கு போர்ப் படைகளை அனுப்பி அங்கே வெற்றிக் கொடிய நாட்டியவர்கள் தமிழர்கள்.

சேரனை பற்றி பேசும்பொழுது தமிழ் இலக்கியம் சொல்கிறது... அவனுடைய கலன்கள் போகக்கூடிய கடலிலே வேறு எந்த அரசனின் கலன்களும் போக முடியாது. அந்த அளவிற்கு கடலிலே ஆளுமை பெற்றவர்கள் சேரர்கள் என்கிறார்கள்.

பாண்டியர்களின் பிரதிநிதிகள் யவன நாட்டிலே இருந்திருக்கிறார்கள். அவர்களுடைய பாண்டிய முத்துக்களுக்கு ஈடாக வேற எந்த முத்துக்களும் கிடையாது என்று யூதர்களின் புனித நூலிலே பதிவு இருக்கிறது என்றால் இதைப் பற்றிய ஒரு அறிவு இருந்திருக்கிறது.

தமிழர்களுடைய துறைமுகங்கள் முசிறி, கொற்கை, காவிரிபூம்பட்டினம் என்று தொன்மையானவை.

தமிழர்கள் ஒரிசாவில் இருக்கக்கூடிய துறைமுகங்களை கூட தன் ஆளுமையின் கீழே வைத்திருக்கக் கூடியவர்கள். ஆனால் நம்முடைய அரசர்கள் போருக்கு படையை அனுப்பிய போது, தான் வென்ற நாடுகளை அடிமைப்படுத்தியதில்லை. அங்கே இருக்கக்கூடிய மொழியை நாகரிகத்தை கலாச்சாரத்தை அழித்துவிட வேண்டும் என்று எண்ணியதில்லை. .

**மனிதனை மனிதனாக மதித்தவன் தமிழன்!**

வெற்றியை நிலைநாட்டினார்கள். மனிதர்களை மனிதர்களாக மதித்த தமிழர்கள் என்பதே நம் பெருமை. வெல்லப்பட்டவர்களை அடிமைப்படுத்தாமல் அவர்களிடமே நாட்டை ஒப்படைத்து எங்களோடு வியாபாரம் செய்யுங்கள், என்று அதிகாரம் செய்யவில்லை. இதுதான் நமக்கும் மற்றவர்களுக்கும் இருக்கக்கூடிய வித்தியாசம்.

யாரையும் அடிமைப்படுத்தவும் இல்லை யாருக்கும் அடிமைகளாகவும் நாம் வாழ வேண்டிய அவசியம் இல்லாமல் வாழ்ந்தவர்கள். உலகம் முழுவதும் இருக்கக்கூடிய மனிதர்களோடு உறவு வைத்திருந்தவர்கள்.

காவேரிப்பூம்பட்டினத்தை பற்றி இலக்கியத்தில் பேசும் பொழுது சொல்கிறார்கள்... வெளிநாட்டில் இருக்கக்கூடியவர்கள் வந்து வியாபாரம் மட்டும் செஞ்சுட்டு போகவில்லை. வேறு மொழி பேசக் கூடியவர்கள் வேற நாடுகளில் இருந்து வரக்கூடியவர்கள் அங்கே வசித்தார்கள். அவங்க வந்துட்டு தன்னுடைய பொருட்களை விற்றுவிட்டு அடுத்த கப்பல்ல ஏறி திரும்பி போகவில்லை.

இங்கே இருக்கக் கூடிய மனிதர்களோடு தாங்களும் சேர்ந்து இங்கே வாழக்கூடிய ஒரு நிலை தமிழர்களுடைய இந்த நாட்டிலே இருந்திருக்கிறது. அப்பொழுது தமிழர்களுடைய உலக அறிவு, உலக உறவுகள் எப்படிப்பட்ட ஒன்றாக இருந்திருக்கும் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். மற்றவர்கள் மதிக்கும்படி வாழக்கூடிய மனிதர்களாக தமிழர்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.



**தமிழ்நாட்டு குழந்தைக்கே தெரியும்!**

இன்றைக்கு தமிழ்நாட்டில் நிலவுக்கு யார் முதல்ல போனது என்று கேட்டால், குழந்தை கரெக்டா பதில் சொல்லும். என்ன பதில் சொல்லுவாங்க ஆம்ஸ்ட்ராங் என்று சொல்லுவார்கள். ஆனா அவர்கள் அனுமான் என்று வடக்கே சொல்கிறார்கள்.

எனக்கு ஒரே ஒரு மகிழ்ச்சி. நாம நிலாவில் ஒரு பாட்டி வடை சுட்ட கதையை நீண்ட நாட்களாக சொல்லிவருகிறோம். நல்ல வேளை அந்த கதை அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை. தெரிந்தால், அந்த பாட்டிதான் நிலவுக்கு சென்ற முதல் ஆள் என்று சொல்லி, இன்றும் அந்த பாட்டி திரும்பி வரவே இல்லை நிலாவில் இருக்கிறார் பாருங்கள் என்று காட்டுவார்கள்.

இப்போது அனுமன் தான் நிலாவில் கால் பதித்தவர் என்று சொல்லக் கூடியவர்கள் தமிழ்நாட்டில் இன்று தலைவர்களாக இல்லை. ஏனென்றால் தொடர்ந்து சிந்திக்கக் கூடிய பாரம்பரியத்தில், கேள்வி கேட்கக் கூடிய பாரம்பரியத்தில் வந்தவர்கள் நாம்.

மத நம்பிக்கை இருந்தது, அரசர்களை போற்றினோம் புகழ்ந்தோம் என்பதையெல்லாம் மறுக்க முடியாது. ஆனால் தமிழ்நாட்டிலே எதுவாக இருந்தாலும் எதிர்த்துக் கேள்விக் கேட்கக் கூடிய கலகக் குரல் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது.

**மதுரையில்தான் ஒரு பெண் கேள்வி கேட்டாள்!**

இதே மதுரையில்தான் கண்ணகி ஒரு அரசனை எதிர்த்து கேள்வி கேட்டார். வேறு எங்காவது ஒரு பெண் நீதிக்காக ஒரு அரசனை பார்த்து, 'முட்டாள் அரசனே' என்று கேள்வி கேட்டதை உலக இலக்கியங்களில் எங்காவது கேட்டிருக்கிறோமா?

புராணமாகவே இருக்கட்டும்... கடவுள் என்று சொல்லக்கூடியவரை எதிர்த்து குரல் கொடுத்த புலவன் நக்கீரன் என்பதை எழுதியது தமிழ்நாடு.

**இந்த கலகக் குரல்கள் தொடர்ச்சியானவை.**

சாதி முக்கியமான விஷயம், அழகான விஷயம் என்று இன்று பலர் பேசிக் கொண்டிக்கிறார்கள். ஆனால் சித்தர் மரபில் சாதியை தூக்கி எறிந்திருக்கிறோம். எலும்பில் தோலில் இன்ன சாதி என்று இலக்கமிட்டிருக்கிறதா என்று கேள்வி கேட்டவர்கள் தமிழர்கள் நாம்.

ஒரு பெண்... ஆண்டாள். இந்த சமூகம் சொல்லக் கூடிய திருமணம் எனக்கு வேண்டாம். நான் பெருமாளை நேசிக்கிறேன். வேறு யாரையும் நான் நெருங்க மாட்டேன், தொடமாடேன். இந்த சமூகம் சொல்வதையெல்லாம் கேட்கமாட்டேன் என்று பாட்டெழுதிய மண் இந்த மண்.

யாராக இருந்தாலும் பரவாயில்லை... நீ எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்கிறாயோ அது தான் நீ யாரென்று நிர்ணயிக்கும் என்று ஜாதியை தூக்கி எறிந்த சமூகம் இந்த சமூகம்.

ஏனென்றால் கேள்வி கேட்கத் தெரிந்தது இந்த சமூகம். அறிவியல் ரீதியாக சிந்திக்க தெரிந்தது நம் சமூகம்.

**வரலாறு தமிழ் மண்ணில் இருந்து எழுதப்பட வேண்டும்!**

ஆதிச்சநல்லூரில் நமது முதலமைச்சர் அவர்கள் மிகப் பெருமையோடு சொன்னார். இனிமேல் உலக சரித்திரத்தை எழுத வேண்டுமென்றால், அதை தமிழ்நாட்டு மண்ணிலிருந்து தான் எழுத வேண்டும் என்று சொன்னார்.

இதற்குக் காரணம் 5300 வருடங்களுக்கு முன்பே உலகத்திலேயே இந்தியாவிலேயே இரும்பின் காலம் தமிழ்நாட்டில் இருந்து 5300 ஆண்டுகளுக்கு முன்னால் இரும்பு ஆதிச்சநல்லூரிலே பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

நாம் இதை சும்மா சொல்லவில்லை. முதன் முதலில் பிளாஸ்டிக் சர்ஜரி எங்கே நடந்தது என்று என்பது பற்றி எல்லாம் கண்டுபிடித்து சொன்ன பிரதமர் எல்லாம் இங்கே இருக்கிறார்கள். நாம் அது போல சொல்லவில்லை.

நம்முடைய முதலமைச்சர் நம்முடைய அரசு அப்படி சொல்லவில்லை. ப்ளோரிடா போன்ற இடங்களில் இருக்கக்கூடிய தொழில்நுட்ப சோதனைக் கூடங்களுக்கு அனுப்பி அறுதி இட்டு தெளிவாக எடுத்துரைத்திருக்கிறோம். 5300 ஆண்டுகளுக்கு முன்பே தமிழன் இரும்பை பயன்படுத்தி இருக்கிறான் என்பதை.

அந்த இரும்பை பயன்படுத்த வேண்டும் என்றால் அதற்கு எவ்வளவு அறிவு இருந்திருக்க வேண்டும், எவ்வளவு அறிவுத்திறன் இருந்திருக்க வேண்டும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**செயலில் காட்டியவர்கள் தமிழர்கள்!**

அதை ஒரு உலோகம் என்று கண்டுபிடித்து, அதை பயன்படுத்த முடியும் என்று கண்டுபிடித்து, திடமான இந்த உலோகத்தை மண்ணில் இருந்து எப்படி பிரித்து எடுத்து உருக்கி அதை பயன்படுத்த வேண்டும் என்று சிந்தித்து அதை செயல்படுத்தி காட்டியவர்கள் தமிழர்கள்.

இரும்பை பயன்படுத்துகிறார்கள் என்றாலே அவர்கள் அடுத்த கட்டத்துக்கு போய்விட்டார்கள் என்றுதான் அர்த்தம்.

5300 ஆண்டுகளுக்கு முன்பே விவசாயம் செய்த சமுதாயம் தமிழ் சமுதாயம். அறிவியல் அறிவோடு கேள்வி கேட்கத் தெரிந்த மனிதர்கள் வாழ்ந்த இந்த தமிழ் மண்.

அதன் தொடர்ச்சி தான் இன்று இந்த தமிழ்நாட்டிலே திராவிட இயக்கம் உருவானதற்கு காரணம். யார் வந்து என்ன கருத்துக்களை இங்கே கொட்டி விட்டு சென்றாலும்... அதை சீர்தூக்கிப் பார்த்து எது வேண்டும் எது வேண்டாம் என்று தெளிந்த முடிவெடுக்கக்கூடிய மண் இந்த மண்.

கோயிலுக்குள் யாரும் வரக்கூடாது நாங்கள் மட்டும்தான் இருப்போம் நாங்கள் மட்டும்தான் போக முடியும் என்றெல்லாம் சில பேர் ஒரு கால கட்டத்திலே சொன்னார்கள்.

இப்பொழுது எல்லோரும் கோயிலுக்குள் வரலாம் என்ற நிலை வந்த பிறகும் சில பேர் சொலிக் கொண்டிருக்கிறார்கள்... ஏன் கோவிலை அரசாங்கம் கையிலே வைத்துக்கொள்ள வேண்டும், அவரவர்களுக்கு கொடுத்து விடுங்கள் என்று பேசுகிறார்கள்.

யாரிடம் கொடுப்பது என்பது அடுத்த கேள்வி. யாரிடம் கொடுக்க வேண்டும் என்று நீங்கள் சொல்வீர்கள் என்பது எங்களுக்கும் தெரியும்.

ஆனால் இந்த கேள்விக்கு முன் சில பேர் புதிய சரித்திரத்தை எழுதுகிறார்கள். நிறைய பாடப்புத்தகங்களிலேயே புதுசு புதிதாக சரித்திரம் எழுதக்கூடிய அவர்கள் இங்கேயும் எழுதுகிறார்கள்.

**1939-ல் கருத்து பதிவு செய்யப்பட்டது!**

மதுரையிலே முதன் முதலாக 1939இல் மீனாட்சியம்மன் கோவிலில் வைத்தியநாத ஐயர் அவர்கள் தான் கோவில் நுழைவுப் போராட்டத்தை முன்னெடுத்தார். அதில் கக்கன் போன்றவர்கள் இருந்தார்கள் என்று சொல்லக் கூடியவர்களுக்கு, நான் இல்லை என்று மறுக்கவில்லை.

1939இல் கோவில் நுழைவுப் போராட்டம் நடந்தது. ஆனால் அவர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை. யாரும் சிறைக்கு அனுப்பப்படவில்லை. ஏனென்றால் அதற்குக் காரணம் இருக்கிறது.

அதற்கு முன்பு 1920 களின் ஆரம்பத்தில் 21, 22 இல் காங்கிரஸ் மாநாட்டிலே தந்தை பெரியார் அவர்கள் ஒரு தீர்மானத்தை கொண்டு வருகிறார். எல்லா சாதியினரும் கோவிலுக்குள் அனுமதிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை அவர் கொண்டு வருகிறார். அந்தத் தீர்மானம் அப்போது இருக்கக்கூடியவர்களால் நிராகரிக்கப்படுகிறது.

ஆனால் கருத்து பதிவு செய்யப்படுகிறது. மக்களிடையே விவாதத்துக்கு வருகிறது. பிறகு வைக்கத்துக்கு சென்று போராட்டங்களை நடத்துகிறார் பெரியார். இங்கே நீதிக்கட்சி ஆட்சிக்கு வருகிறது.

1922 இல் கோவில்களை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மெட்ராஸ் ஹிந்து ரிலீஜியஸ் சாரிட்டபிள் எண்டோன்மெண்ட் ஆக்ட் என்ற சட்ட மசோதாவை கொண்டு வருகிறார்கள். அப்போதே இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி இருக்கிறார்கள்.

அதாவது ஒரு மசோதாவை கொண்டு வர வேண்டும் என்றால் அதைப் பற்றி தெரிந்தவர்களிடம் ஆலோசிப்பது, அங்கே இருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகள் உடைய கருத்துக்களை கேட்பது அதற்குப் பிறகு மசோதாவை சட்டமன்றத்திற்கு கொண்டு வருவது.

ஒரு கட்டத்தில் நாடாளுமன்றத்திலும் நடந்தது.

இப்போது செலக்ட் கமிட்டிக்கு எல்லாம் அனுப்பிய ஞாபகம் வெங்கடேசன் போன்றவர்களுக்கு இருக்கிறதா என்று தெரியவில்லை. நாங்கள் பார்த்திருக்கிறோம். 'அவர்' வந்த பிறகு இந்த புதிய ஆட்சியில் செலக்ட் கமிட்டிக்கு எல்லாம் எதுவும் போவதில்லை. ஏனென்றால் அங்கே முடிவு பண்ணி வருகிற மசோதாவை பெரும்பான்மையோடு நிறைவேற்றிவிட வேண்டும் என்பது தான் அவர்கள் திட்டம்.

ஆனால் அப்பொழுது ஜனநாயகத்தில் நம்பிக்கை உள்ள நீதிக்கட்சி அந்த மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்புகிறது. இரண்டு வருடம் செலக்ட் கமிட்டி அதை பரிசீலனை செய்துவிட்டு, 1924 இல் இந்த சட்டத்தை கொண்டு வருகிறார்கள்.

இந்த சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு இந்து கோவில்கள் அரசாங்க சொத்து ஆகிவிட்டன. அதனால்தான் 1939இல் கோவில் நுழைவு போராட்டத்தின் போது யாரும் கைது செய்யப்படவில்லை சிறைக்கு அனுப்பப்படவில்லை. என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**வீரப் பெண்ணின் போராட்டம்!**

அதே நேரத்தில் 1929 இல் தமிழ்நாட்டில் ஈரோட்டில் கோவில் நுழைவு என்ற அந்த போராட்டத்தை கையில் எடுத்தவர் ஒரு பெண்.

பெரியாரின் இணையராக வாழ்ந்த நாகம்மை என்ற பெண். பெரியார் அது பற்றி பேசி இருக்கிறார்.

என்னுடைய மனைவி, இயக்கத் தோழர்கள் கோவில் நுழைவுக்காக எல்லா சாதியினரையும் அழைத்துக் கொண்டு சென்றபோது அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. தண்டனை விதிக்கப்பட்டது. வழக்காடு மன்றத்தில் வழக்கறிஞர்களை வைத்து வாதாடி தான் நான் அவர்களை மீட்டெடுத்தேன் என்று அவரே பதிவு செய்கிறார். அதுவரைக்கும் அவர் தர்மகர்த்தாவாக இருந்தார்.

கடவுளைப் பற்றி எனக்கு வெவ்வேறு கருத்துக்கள் இருக்கலாம். ஆனால் நான் என்னுடைய நிர்வாகத்தை சரியாக செய்தேன். என்னுடைய குடும்பத்தினர் பல லட்சங்களை கோயில்களுக்காக செலவு செய்திருக்கிறார்கள். ஆனால் அந்த கோவில்களிலே வேறு இனத்தவரை சாதியினரை அனுமதிக்கவில்லை, நான் கொண்டு வர வேண்டும் என்று நினைத்த மாற்றங்கள் எதையுமே அவர்கள் அனுமதிக்கவில்லை. மனிதர்களை ஏற்றுக் கொள்ளாத இடத்திலே நான் இருக்க விரும்பவில்லை நான் வெளியே வந்து விட்டேன் என்று கூறுகிறார்.

அதனால் தமிழ்நாட்டில் முதல் கோவில் நுழைவுப் போராட்டம் தலைமை ஏற்ற நடத்தியது நாகம்மையார் என்ற ஒரு பெண்.

பெண்கள் சங்கத்தில் பாட்டு மட்டும் எழுதவில்லை. போராட்டக் களங்களில் முன் நின்று போராடிய மண் தான் இந்த தமிழ்நாடு என்பதை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

இப்படி எத்தனையோ பெருமைகள் எத்தனையோ கலகங்களுக்கு முன்னோடியாக, மாற்றங்களுக்கு முன்னோடியாக இருந்திருக்கக் கூடிய மண்தான் இந்தத் தமிழ்நாடு.

அதனால்தான் இன்றைக்கு தெற்கு உயர்ந்து கொண்டே போகிறது. எழுந்து கொண்டே போகிறது.

திராவிட இயக்கத்தின் அடியொற்றி வந்த தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சியிலே... திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் தான் முதல் முறையாக ஐ டி பாலிசி கொண்டுவரப்பட்டது.

**தமிழ் நாட்டில் கம்ப்யூட்டருக்கு வித்திட்டவர் கலைஞர்!**

கம்ப்யூட்டர்களை பற்றி யாருமே யோசிக்கவில்லை. தகவல் தொழில்நுட்பத்தை பற்றி யாருமே சிந்திக்காத ஒரு காலகட்டத்தில், திருக்குவளை என்ற ஒரு கிராமத்திலிருந்து வந்த ஒரு மனிதன் தான் சிந்தித்தார்.

இன்று சிலிக்கான் வேலியிலும் ஐ.டி.யிலும் வேலைக்கு இருக்கக்கூடிய மாணவர்கள் பெருமையோடு அங்கே செல்கிறார்களே... அதற்கு வித்திட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

தந்தை பெரியாரின் பேரறிஞர் அண்ணாவின் வழியிலே வந்தவர்.

இன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ட்ரில்லியன் டாலர் எக்கனாமி என்ற இலக்கோடு பயணித்துக் கொண்டிருக்கிறார்.

இது பற்றி பல பேர் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நான் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மண் என்றால்... பல்வேறு ஊர்களில் இருந்தும் எழுத்தாளர்கள் கவிஞர்கள் சிந்தனையாளர்கள் வந்து இங்கே கூடி மொழியை கொண்டாட வேண்டும் என்று நினைத்த மண்.

இதுதான் தமிழருடைய பாரம்பரியம். தமிழை தமிழனின் வீரத்தை தமிழின் பெருமைகளை நம்முடைய வேந்தர்கள் பாதுகாத்தார்கள்.

இதே நேரத்தில் எந்த அளவுக்கு தொழில் வளர்ச்சி முக்கியம் எந்த அளவுக்கு வியாபாரம் முக்கியம் என்பதையும் புரிந்து கொண்டவர்கள் தமிழர்கள்.

அந்தப் பாரம்பரியத்தில் வந்திருக்கக்கூடிய நம்முடைய திராவிட மாடல் ஆட்சி, இன்றைக்கு ஜெர்மனி சென்று தொழில் முதலீடுகளை கொண்டு வருகிறோம்.

ஆக்ஸ்போர்டில் பெரியாரைப் பற்றி தமிழகத்தை பற்றி பேசக்கூடிய அதே நேரத்தில்... அங்கிருந்தும் முதலீடுகளை கொண்டு வருகிறார் நமது முதலமைச்சர் அண்ணன்.

அதனால் தமிழின் பெருமை தமிழ் மொழியின் பெருமை நம்முடைய உரிமைகளை முழங்கியிருக்கிறார்.

தமிழர்களிடமிருந்து ஒரு விஷயத்தை எல்லோரும் கற்றுக் கொண்டார்கள் என்றால் அது அனைவருக்கும் நன்றாக இருக்கும். அமெரிக்காவாக இருக்கட்டும் ஒன்றிய அரசாங்கமாக இருக்கட்டும்...

தொண்டி துறைமுகத்தில் வியாபாரம் செய்த வியாபாரிகளை பற்றி ஒரு பதிவு இருக்கிறது.

இங்கே இருக்கக்கூடிய வியாபாரிகள் தன்னுடைய பொருள் இன்னொருவருடைய பொருள் என்று வேறுபடுத்தி பார்ப்பதில்லை. தன்னுடைய பொருளுக்கு எப்படி விலை நிர்ணயம் செய்து அதுவும் மரியாதையாக வாங்கப்பட வேண்டும் என்று நினைக்கிறார்களோ அதே போல, தான் வாங்கக்கூடிய பொருள்களுக்கும் அதே மரியாதை கொடுத்து வாங்குவார்கள்.

இந்தப் பாடத்தை ஒன்றிய அரசாங்கம், மற்ற நாடுகளின் தலைவர்கள் கற்றுக் கொண்டால், தமிழன் சொல்லிக் கொடுத்த இந்த பாடத்தைக் கற்றுக் கொண்டால் இந்த நாடு மட்டுமல்ல உலகமும் எழுச்சி பெறும் நன்றி".

இவ்வாறு கனிமொழி கருணாநிதி சிறப்புரையாற்றினார்.

உடன், சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட கழகச் செயலாளருமான கோ.தளபதி, பாராளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், மாவட்ட ஆட்சியர் பிரவீன்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசி, புதூர் பூமிநாதன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்!